*7*

# மனிதனைக் குறித்து கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது என்ன

*"உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்" (சங்கீதம் 8:3, 4).*

ஒரு நபர் தன்னைப் பற்றி உண்மையை அறிந்து கொள்வது அவசியமாகும். மனிதன் என்றால் என்ன?[1] அவனுடைய தோற்றம் என்ன? அவன் எங்கே போகிறான்? வரலாற்றுத் துவக்கத்திலிருந்தே தத்துவ மேதைகளால் இந்தக் கேள்விகள் கேட்கப் பட்டு வருகின்றன. ஒரு நபருடைய முடிவுகள் அவனுடைய செயலைக் குறித்து எடுக்கும் தீர்மானம் அவனுடைய முடிவு குறித்த விதி ஆகியவைகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

கிறிஸ்தவர்கள் மனிதனைக் குறித்து விசுவாசிக்க வேண்டியது என்ன? வெளிப்படையாய், மனிதன் என்பவன் சில வியாக்கியானங்கள் குறிப்பிடுவதைக் காட்டிலும் அதிகமானவனாய் இருக்கிறான். ஒரு பழங்குடிப் பாடலில், "சிக்ஸ் டீன் டன்ஸ்" (பதினாறு டன்கள்) எனத் தலைப்பிட்ட பாடலில், "சில ஜனங்கள் சொல்லுகிறார்கள் மனுஷன் சேற்றிலிருந்து உருவாக்கப் பட்டான். ஒரு ஏழை மனிதன் சதையாலும் இரத்தத்தினாலும், தோலாலும் எலும்பாலும் - பலவீனமான மனதும் பலமுள்ள முதுகுமாக உண்டாக்கப் பட்டான்" என்று சொல்லப் பட்டது. மனுஷன் நிச்சயமாகவே இவற்றிற்கு மேற்பட்டவன்.

ஒரு மழலைகளின் பாடல் சொல்லுகிறது,

*சிறு பையன்கள் எதினால் உண்டாக்கப் பட்டவர்கள்?*
*சிறு பையன்கள் எதினால் உண்டாக்கப் பட்டவர்கள்?*
*தவளைகள் மற்றும் நத்தைகள்*
*மேலும் நாய்க்குட்டிகளின் வால்கள்*
*சிறுபையன்கள் இவைகளினாலே உண்டாக்கப் பட்டார்கள்.*

*சிறிய பெண்கள் எதினால் உண்டாக்கப் பட்டார்கள்?*
*சிறிய பெண்கள் எதினால் உண்டாக்கப் பட்டார்கள்?*
*சர்க்கரை மற்றும் நறுமணப்*
*பொருள் எல்லாமே அருமையாக*
*சிறிய பெண்கள் இவைகளினாலே உண்டாக்கப் பட்டார்கள்.2*

*ரீடர்ஸ் டைஜஸ்ட்* எனும் புத்தகத்தில் ஒரு குறுகிய கட்டுரை வெளியாகியது.

*மேற் குறிப்பிட்ட மழலைகளின் பாடலை விமர்சித்து, ஒரு பெண் நான்கு அவுன்ஸ் சர்க்கரையினால் உருவாக்கப் பட்டவள் என்று குறிப்பிட்டனர். கூடுதலாக, கீழ்வரும் பொருட்கள் அவளுடைய உடம்பில் இருக்கின்றன:*

- *ஐந்து நீச்சல் குளங்கள் கிருமிகளால் பாதிக்கப் படாத அளவுக்கு குளோரின் எனும் கிருமி நாசினி கொண்டதாய்;*
- *85 பவுண்ட் பிராணவாயு (ஆக்ஸிஜன்);*
- *2 அவுன்ஸ் உப்பு;*
- *50 கால் காலன் அளவு (சுமார் 5.5 லிட்டர்) தண்ணீர்;*
- *3 பவுண்ட் கால்சியம் (சுண்ணாம்பு சத்து);*
- *24 பவுண்ட் கார்பன் (கனிமம்);*
- *20, 000 தீக்குச்சிகள் தயாரிக்கப் போதுமான எரி பொருள்;*
- *10 பார் (கட்டி) சோப் செய்ய போதுமான கொழுப்பு;*
- *ஆறு ஆணிகள் செய்யப் போதுமான இரும்புச் சத்து;*
- *ஒரு நாயில் ஒட்டியிருக்கும் பேன்களை ஒழிக்கும் சக்தி பெற்ற போதிய கந்தகம்;*
- *வெடிக்கக்கூடிய போவதுமான அளவு கிளிசரின்;*
- *ஆனால் எவ்வித நறுமணப் பொருளும் இல்லை![3]*

*பெண்களும் (பையன்களும்) இவைகளை விட மேலானவர்கள்!*

*லாஸ் ஏஞ்செலஸ் எனுமிடத்தில், 1960 களில், எடையே இல்லாத நிலையில் ஒரு நபருடைய இயக்கங்களைக் குறித்து கணக்கிட்டுக் கொண்டிருந்தனர் இரண்டு வேதியியல் பொறியாளர்கள். மனிதனுடைய சமசீர் எடையினிமித்தம், திரவம் நிறைந்த ஒரு பெரிய நீர் குமிழி வித்தியாசப்பட்ட வடிவத்துடன் இருப்பது போல் தான் "சரியான அளவில்லாதவனாக மனிதன் இருக்கக் கூடும்"[4] என்று ஆலோசனையாகத் தெரிவித்தனர். மனிதன் இதைக் காட்டிலும் மேலானவன்!*

*மனிதனைக் குறித்து திருமறை சொல்லுவதை கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர்: அதாவது அவன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப் பட்டவன் என்றும் நித்தியத்திற்குரிய ஒரு ஆத்துமாவையுடையவனாக அவன் இருக்கிறான் என்றும் விசுவாசிக்கிறார்கள். இதைக் கூர்ந்து ஆய்ந்து விரிவான விளக்கத்தைக் காண்போமாக.*

## மனிதன் சிருஷ்டிக்கப் பட்டவன்

**தேவனால்**

*திருமறை சொல்லுகிறது,*

> பின்பு தேவன், "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்து பறவைகளையும் மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்." தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார்; அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்! ஆணும் பெண்ணுமாக அவர்களைச்

*சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:26, 27).*

*மனுஷன் சிருஷ்டிக்கப் பட்டான்; அவன் வெறுமனே "பரிணாமம்" பெற்று வரவில்லை. பரிணாமக் கொள்கைக்காரர்கள் மனிதன் "நிர்வாணமான மனிதக் குரங்கைக்"[5] காட்டிலும் அதிகமானவனல்ல என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். மனிதன் பிராணிகளைப் போலவே இருப்பானேயாகில், இரண்டுக்கும் இடையேயான ஒரு தெளிவான வித்தியாசத்தை எப்படி விளக்க முடியும்? பெர்னார்டு ராம் என்பவர், பரிணாமக் கொள்கையால் விளக்க முடியாத நான்கு அனுபவங்களை மேற்கோள் காட்டுகிறார். இவைகள் அனைத்தும் மனிதனுடைய உள்ளுணர்விலேயே இயல்பாக அமைந்த சுபாவம் என்பதை நிரூபிக்கின்றன.*

1. *மனிதனுக்கு பகுத்தறியும் சிந்தனைக்குரிய வல்லமை இருக்கிறது.*
2. *ஒழுக்க ரீதியான அனுபவமும் ஒழுக்கமான காரியங்களைத் தெரிந்து கொள்ளும் திறமையும் மனிதனுக்கு இருக்கிறது.*
3. *மனிதன் புலன் உணர்வு அமையப் பட்டவன், எனவே அழகானவைகளை ரசிக்கும் தன்மை இதைச் சார்ந்தது.*
4. *மார்க்க சம்பந்தப்பட்ட (அல்லது பக்தி சம்பந்தப்பட்ட) விஷயத்திலும் மனிதனுக்கு அனுபவ ரீதியான வலிமை இருக்கிறது. அவன் "தேவனில் கொண்டுள்ள விசுவாசம், அவனுடைய தொழுகையில் காணுகின்றன புலன் மற்றும் உள்ளுணர்வு, ஆவிக்குரிய ஒழுங்கு முறையில் அவனுக்கு இருக்கும் அனுபவம்" ஆகியவை பிராணிகளுடன் பகிரப் பட்டவைகளல்ல.*[6]

*திருமறையை ஏற்றுக் கொள்வோர் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை விசுவாசிக்க வேண்டும். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நாம், சங்கீதக்காரனுடன் சேர்ந்து சொல்லலாம், "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்" (சங்கீதம் 139:14).*

### அவருடைய சாயலில்

*''நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக'' என்று சொன்ன தேவன், "... தமது சாயலாகவே தேவன் மனுஷனை சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:26, 27அ). எந்த வகையில் மனுஷனை தேவனுடைய சாயலில் உண்டாக்கினார்? இதன் கருத்து தேவன் மனிதனுடைய சாயலில் உண்டாக்கப் படவில்லை, மனிதனுடைய அளவீட்டுக்கும் ஒழுங்கீனத்துக்கும் ஏற்றாற் போலவோ, அல்லது நம்முடைய தோற்றத்தைப் போலவோ இருப்பதில்லை. நம்மை உண்டாக்கினவர் நம்மைப் போல இருப்பார் என்று நாம் நினைத்து விடக்கூடாது; மாறாக, நாம் அவரைப் போல இருக்கிறோம். மனுஷர்கள் (1) பகுத்தறிவு உள்ளவர்கள்; (2) புலன் உணர்வுள்ளவர்கள்; (3) விருப்பு வெறுப்பு உள்ள சிருஷ்டிகளாக, எதையும் தெரிந்து கொள்ளும் (தேர்ந்தெடுக்கும்) சுதந்திரவாளிகளாக இருக்கிறார்கள்; மேலும் (4) ஆவிக்குரிய சிருஷ்டிகளாயும் இருக்கிறார்கள். மனித வர்க்கம் தேவனுடைய சாயலில் உண்டாக்கப் பட்டவர்கள் எனும் உண்மை வேறு அநேக சத்தியங்களுக்கு நம்மை நடத்துகிறது:*

தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனிதன் ஒரு மகிமையான துவக்கத்தைப் பெற்றான். தெய்வீகத் தீ பொறி ஒவ்வொரு மனித ஜீவிக்குள்ளும் இருக்கிறது! பரிணாமக் கொள்கையில் மனிதனுடைய துவக்கம் ஒரு இருள் நிறைந்த ஆழமான புராதன காலத்து சமுத்திரப் பகுதியிலிருந்த ஒருயிர் அணுவிலிருந்து தோன்றிய ஒரு ஜீவியாக போதிக்கிறது; மனிதன் தேவனுடைய விசேஷித்த சிருஷ்டியாக தன் துவக்கத்தைக் கொண்டிருக்கிறான் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர்.

தேவனுடைய சாயலில் மனிதன் உண்டாக்கப்பட்டபடியால், அவன் விலங்குகளிலிருந்து வித்தியாசப்பட்டிருக்கிறான். மனிதர்கள் அளவு ரீதியில் மட்டும் மற்ற விலங்குகளிலிருந்து வித்தியாசப் பட்டவனல்ல - அதாவது, அவனுக்கு பெரிய மூளை இருக்கிறது என்பதாலோ அல்லது அவன் நிமிர்ந்து நடக்கக் கூடும் என்பதாலோ அவன் உயர்ந்த ஜீவி அல்ல. தகுதியாம்ச ரீதியிலே இரண்டு சிருஷ்டிகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. மனிதன் விலங்குகளிடம் அதிகமான காரியங்களில் பகிர்மான தொடர்புடையவனாக இருந்த போதிலும், திருமறையின்படி, அவன் முற்றிலும் வித்தியாசப்பட்டே காணப்படுகிறான். திருமறை - விசுவாசிகள் விலங்குகளை நேசிக்கிறவர்களாயிருக்கலாம் ஆகிலும் மனித வர்க்கத்துக்கு சமமாக அவை காண மதிப்பிடும் தவறைச் செய்ய மாட்டார்கள்.

இன்றைய உலகின் மனிதனைக் குறித்த தலையாய கண்ணோட்டம் அவன் கீழ்த்தரமான விலங்கினத்திலிருந்து பரிணமித்து வந்தவன் என்ற நம்பிக்கை, ஆதலால் மனிதனுக்கு ஆத்துமா இல்லை, மரணம் அவனுடைய வாழ்வுக்கு முடிவைக் கொண்டு வருகிறது என்று கருதுகிறான். அப்படிப்பட்ட தத்துவத்தை மனதில் கொண்டிருப்பது, ஒருவரையொருவர் மிருகத்தைப் போல் நடத்துகிற (வல்லவன் வறியோனை அனுகூலமாக்கிக் கொள்ளும்) தன்மைக்கு நடத்துகிறது; மிருகங்களைப் போல பாலியல் உறவு கொள்ளுவதும் (ஒழுக்கத்தைப் பற்றியோ, திருமணம் செய்ய வேண்டிய அவசியம் குறித்தோ, அல்லது குடும்பத்தைப் பற்றியோ அக்கறை இன்றி செயல் படுகின்றனர்); வேண்டாமென கருதும் சிசுக்களையும் வியாதிப்பட்டவர்களையும் பெரியவர்களையும் (இவர்களால் சமுதாயத்துக்கு எந்த பயனும் இல்லை என்று யூகித்து) கொலை செய்கிறான்; விலங்குகளை தனக்கு சமமாகவோ, அல்லது தன்னைக் காட்டிலும் மேலானவைகளாகவோ நடத்துகிறான்; மேலும் (அதிகார ஆதாயம் மற்றும் பதவிகளை குவித்தல் போன்ற) உலகப் பிரகாரமான காரியங்களில் மட்டும் கவனமுடையவர்களாய் இருக்கிறார்கள். மிருகங்களைக் காட்டிலும் மனிதன் மேலானவனல்ல எனும் கருத்து இன்றைய நமது உலகத்தின் தவறுகளை விளங்கச் செய்கிறது.

மனிதன் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மற்ற சிருஷ்டிகளின் மேல் அவன் அதிகாரமுடையவனாயிருக்கிறான். மனிதன் "சமுத்திரத்து மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும்," ஆள வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம் (ஆதியாகமம் 1:26; காண்க சங்கீதம் 8).

*இரட்டை இயல்புடன்*

*மனித வர்க்கம் மாம்சத்துக்குரிய ஜீவிகளைப் போலவே ஆவிக்குரிய ஜீவிகளாயுமிருக்கின்றனர். ''தேவன் ஆவியாயிருக்கிறார்'' (யோவான் 4:24அ); அதே போல மனிதனும் அடிப்படை சாராம்ஸத்தில் ஆவிக்குரிய ஜீவியாயிருக்கிறான். இதினால், மாமிசப் பிரகாரமான உணவு மட்டும் அவனுடைய தேவைகள் யாவற்றையும் சந்திப்பதில்ல. "மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று இயேசு சொன்னார் (மத்தேயு 4:4).*

*மனிதன் சரீரத்தையும் ஆத்துமாவையும் (ஆவியையும்) உடையவன் என்று திருமறை சொல்லுகிறது.[7] பிரசங்கி 12:7ல், "மண்ணானது மண்ணுக்குத் திரும்பி ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்குச் செல்லுகிறது" என்று சொல்லப்படுகிறது. இயேசு தமது சீஷர்களிடம், "ஆத்துமாவை கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே நீங்கள் பயப்படுங்கள்'' என்று சொன்னார் (மத்தேயு 10:28); பவுல், ''எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது" (2 கொரிந்தியர் 4:16; 5:1யும் காண்க)[8] என்று எழுதினார்.*

*மேலும், மனிதன் ஆத்துமாவாக இருப்பதால் (அல்லது கொண்டிருப்பதால்), மரணத்துக்குப் பின்பும் மனித வர்க்கம் வாழ்கிறது. மறுரூப மலையில் மோசேயும் எலியாவும் கிறிஸ்துவினிடத்தில் பேசினார்கள் (மத்தேயு 17). மற்ற அநேக போதனைகளோடு மறுரூபமாகிற காட்சியில் மோசேயும் எலியாவும் தொடர்ந்து வாழ்கிறார்கள் என்பதையும் போதிக்கிறது. அவர்களது உலக வாழ்க்கை பூமியில் முடிந்து 700 முதல் 1, 400 ஆண்டுகள் சென்ற பின்பும் உயிரோடிருக்கிறார்கள்! லூக்கா 16ல் குறிப்பிடப் படும் உவமையில் லாசரு, ஐசுவரியவான் கதையில் மரணத்துக்குப் பின்பும் தொடர்ந்து வாழ்ந்தார்கள் என்பதோடு, அந்த நேரத்தில் ஆபிரகாமும் இன்னும் ஜீவிக்கிறார் என்பதை சுட்டிக் காட்டுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 6:9, 10ல் மரித்த இரத்த சாட்சிகள் தொடர்ந்து (ஜீவிப்பவர்களாய்) தேவனிடத்தில் அவரது நீதியை பூமியின் மேல் நடப்பிக்கும் படி அழுததாக வாசிக்கிறோம்.*

*மனிதனுக்குள்ள இரட்டை இயல்பு எனும் கருத்து ஆறுதலளிக்கிறது. மரணம் முடிவல்ல என விசுவாசிக்க ஜனங்கள் விரும்புகிறார்கள்; அவர்கள் நித்திய வாழ்வில் நம்பிக்கை வைக்க விரும்புகிறார்கள். ஆயினும், தேவனற்ற வாழ்க்கையை வாழ்பவர்களுக்கு, மரணத்துக்குப் பின்பும் மனிதன் தொடர்ந்து வாழ்கிறான் எனும் அறிவு ஆறுதல் அளிக்கிற செய்தியாக இல்லாமலிருக்கலாம். மனிதனுடைய மரணத்துக்குப் பின்னான வாழ்க்கை வேதனையோடு கூடியதாக இருக்கலாம் (லூக்கா 16)! இருப்பினும், ஒவ்வொருவரும் அவனோ அல்லது அவளோ பூமியில் வாழ்வு முடிந்த பிறகும் அவர்களுடைய ஆத்துமா தொடர்ந்து வாழ்கிறது என்பதை பாராட்ட வேண்டும்.*

## மனிதன் எல்லையற்ற வகையில் தகுதியுள்ளவன்

*மனுஷனை உண்டாக்கின பின்பு, தேவன் "மிகவும் நல்லது" என்று கண்டார் (ஆதியாகமம் 1:27-31). "மகிமையினாலும் கனத்தினாலும்'' மனிதனை தேவன் முடி சூட்டினார் என்று சங்கீதம் 8 சொல்லுகிறது, தொடர்ந்து மனிதனுக்கு*

"[தேவனுடைய] கரத்தின் கிரியைகளின் மேல் ஆளுகை தந்தார்" என்றும் "சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினார்" (சங்கீதம் 8:5-8) என்றும் கூறுகிறது.

மத்தேயு 6:26ல் மனிதன் ஆகாயத்து பட்சிகளைப் பார்க்கிலும் விசேஷித்தவன் என்று இயேசு சொன்னார். மத்தேயு 16:26ன் படி, ஒரு தனிமனிதன் உலகம் முழுவதையும் காட்டிலும் மேலானவன். ஏன்? ஏனெனில் அந்த நபருடைய ஆத்துமா கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயத்துக்கு கொள்ளப் பட்டது!

> உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப் பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1 பேதுரு 1:18, 19).

நம்முடைய தகுதிக்கு மேல் தேவன் இன்னும் அதிகமாய் நமக்கு செலுத்த முடியுமா? இல்லையென்றால், இந்த வசனம் நாம் கிறிஸ்துவின் மரணத்துக்கு மதிப்புடையவர்களாயிருந்திருக்கிறோம் என்று நிரூபிக்கிறது!

பழைய புள்ளியியல் கணக்குப்படி மனித சரீரம் 98 சென்ட் (அதாவது 44 இந்திய ரூபாய்) மட்டுமே மதிப்புள்ள வேதியல் பொருட்களைக் கொண்டுள்ளது எனக் கூறுகிறது. அது மறுமதிப்பீடு செய்யப் படவேண்டும். இப்பொழுது விஞ்ஞானிகள் இந்த வேதியியல் பொருட்களின் மதிப்பை கண்டு பிடித்து, டு பான்ட் கம்பெனியின் அறிக்கையில் சராசரி மனித சரீரத்திலிருந்து 85 மில்லியன் டாலர் மதிப்புள்ள சக்தி தயாரிக்கப்படும் என்று கூறப் பட்டது.[9] ஆயினும், ஒரு நபர் அதைக் காட்டிலும் உண்மையில் அதிகமான மதிப்பைக் கொண்டிருக்கிறான்!

சங்கீதம் 8 ஐ மீண்டும் வாசிக்கும்போது, மனிதன் "தேவ தூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவனாக உண்டாக்கப் பட்டான்" என்று பார்க்கிறோம் (வசனம் 5அ). செய்தி இதுதான்: மனிதன் மதிப்பு மிக்கவனாயிருந்தாலும், தேவனோடு ஒப்பிடுகையில் அவன் சிறியவனும் அற்பமானவனுமாவான்! தேவன் தனக்குக் கொடுத்த கனத்திற்கு பாத்திரமில்லாதவன் என்று மனிதன் அடிக்கடி நிரூபித்துள்ளான்!

தேவனை கீழே தள்ளி தான் தேவனுடைய இடத்தில் அமர வேண்டுமென்பதே எப்பொழுதும் மனிதனுடைய பிரச்சனையாக இருந்து வந்துள்ளது. ஏதேனில், தேவனைப் போல அறிவைப் பெறவேண்டு மென்பதற்காகத்தான் ஏவாள் பாவம் செய்தாள் (ஆதியாகமம் 3:5). இப்படிப்பட்ட எண்ணத்தைக் குறித்து பவுல் ரோமர் 1ல், பேசினார், ஜனங்கள் சிருஷ்டிகரை தொழுது சேவியாமல் சிருஷ்டியை தொழுது சேவித்தனர் என்றார் (ரோமர் 1:25). இதிலே கூறும் "சிருஷ்டி" தொழுகை பெரும்பாலும் நமக்கு நாமே ஊழியஞ் செய்து கொள்ளுதலாகும்; மனித வர்க்கம் மனிதனைத் தொழுது கொள்ளும் சுபாவமுடையது! ஒரு மனிதன், எவ்வளவு பெரியவனாக இருந்தாலும், அவன் தேவனுக்குச் சமமானவன் அல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

## தேவனை தொழுது கொள்ளுவதே மனிதனுடைய வாழ்வின் நோக்கம்

*“இங்கே நான் ஏன் இருக்கிறேன்?” என்பது ஒரு பொதுவானதும் இன்றியமையாததுமான கேள்வி. திருமறை இதற்கு பதில் சொல்லுகிறது: தேவனுக்குக் கீழ்ப்படியவும், தேவனை தொழுகை செய்யவும், தேவனுக்கு மகிமை செலுத்தவும் நாம் இங்கே இருக்கிறோம் (ஏசாயா 43:7; 1 கொரிந்தியர் 10:31 ஆகிய வசனங்களைக் காண்க). தேவன் மனிதனை ஏன் உண்டாக்கினார்? அவருக்கு மகிமையைச் செலுத்தும்படி! பிரசங்கி 12:13 இந்த கருத்தை வலியுறுத்துகிறது: “காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே.”*

*பொதுவான கேட்பாட்டின்படியோ அல்லது செயலிலோ நாத்திகனாக - தேவனற்ற வாழ்க்கையை வாழ்வது நம்மை உண்டாக்கினவரை கனவீனப் படுத்தி நாம் வடிவமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கத்திற்கு அப்பால் நம்மை வேறு சில காரியங்களுக்கு நமக்கு நாமே பயன்படுத்துவதாகும். இது டயரை மாற்றுவதற்கு பென்சிலை பயன்படுத்துவது போன்றதாகும் அல்லது, சரியாகச் சொன்னால், “நான் எழுதுவதற்காக பயன்படுத்தப் பட்டு சோர்ந்து போனேன்; மாறாக இனி நான் டயர்களை பொருத்துவேன்” என்று பென்சில் சொல்லுவது போன்றது.*

*ஆதாமும் ஏவாளும் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றத் தவறி விட்டார்கள், ஆதலால் ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப் பட்டார்கள். அப்பொழுதிலிருந்து எல்லாருமே தவறிக் கொண்டுள்ளனர். மனித வர்க்கத்தின் வரலாறு மனிதர்கள் பாவத்திலிருக்கிற கதைதான். அந்தக் கதை நம்மிடத்திலும் தொடர்கிறது. “எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்ற வர்களாகி” (ரோமர் 3:23). ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் ஆதாம் ஏவாள் ஏதேன் தோட்டத்தில் அனுபவித்த வாழ்வை மறு வாழ்வாக வாழ்ந்து கொண்டுள்ளனர். பாவமில்லாமல் பிறந்து, வளர்ந்து கணக் கொப்புவிக்கும் பிராயத்தை அடைகிறார்கள்; ஒரு காலக் கட்டத்தில், சோதனையில் விழுந்து போய். பாவஞ் செய்தலை தெரிந்து கொள்ளுகிறார்கள் அதன் விளைவு, ஒவ்வொருவரும், ஒரு வகையில், “தோட்டத்திற்கு புறம்பாக்கப்படுகிறார்கள்.” அதாவது, பாவத்தினிமித்தம், ஒவ்வொருவரும் தேவ கோபாக்கினைக்கு உள்ளாகி அவரிடத்திலிருந்து பிரிக்கப்படுகிறார்கள். எல்லாரும் இழந்தவர்களாகி இரட்சிப்பின் தேவையையுடையவர்களாயிருக்கின்றனர் (ரோமர் 6:23; எபேசியர் 2:12). தன்னுடைய விழுந்துபோன சூழ்நிலையின் உண்மையை ஒருவர் எதிர் கொள்ள விருப்பமில்லாத பட்சத்தில், மனிதனைக் குறித்த சத்தியத்தை இன்னும் அவர் கிரகித்துக் கொள்ளவில்லை என்றே பொருள்!*

## மனிதன் பரலோகத்திற்கோ நரகத்திற்கோ விதிக்கப் பட்டவன்

*மனுஷனுக்கும் விலங்குகளுக்குமிடையேயுள்ள மிகவும் முக்கியமான வித்தியாசம் இது தான். மனிதன் தன்னுடைய நித்திய விதியை தெரிந்து கொள்ளும் உரிமை பெற்றவன்! ஒவ்வொருவரும் தனித்தனியே தேவனுடைய நோக்கத்தைத் தன்னுடைய வாழ்க்கைக்கென நிறைவேற்றுவதா வேண்டாமா*

*என்பதை தீர்மானிக்கின்றனர். அவனுடைய நித்தியமானது தேவனுடைய மாறாத முன் குறித்தலின்படி, நியமிக்கப்படுவதல்ல, அல்லது அவனுடைய எதிர்காலம் முற்றிலும் அவனுடைய வாழ்க்கையின் சூழ்நிலையினால் தீர்மானிக்கப் படுவதுமில்லை. மனிதனுடைய மூலக் கூறுகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் அனுபவத்தைக் காட்டிலும் மனிதன் மேலானவன்; அவன் "இயற்கையைக்" காட்டிலும் கூடவே "போஷாக்கைக்" காட்டிலும் மேலானவன். ஒருவனுடைய இவ்வுலக வாழ்வும் மறுமையில் அடையும் விதியும் அவன் சிருஷ்டிகரையா அல்லது சிருஷ்டியையா எதற்கு ஊழியஞ் செய்ய தீர்மானிக்கிறானோ அதைப் பொறுத்து அமைகிறது.*

## *முடிவுரை*

*மனிதனை மூன்று கேள்விகள் கலக்குகின்றன, அவை மூன்றுக்கும் திருமறை பதில் அளிக்கிறது: (1) நான் எங்கிருந்து வந்தேன்? நீ தேவனுடைய ரூபத்தில் சிருஷ்டிக்கப் பட்டவன். (2) நான் ஏன் இங்கு இருக்கிறேன்? பூமியிலே நீ இருப்பதன் நோக்கம் தேவனை தொழுது கொள்ளுவதும், அவரை மகிமைப் படுத்துவதும், அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கும் தான். (3) நான் எங்கே போகிறேன்? உங்கள் நித்திய விதி ஒன்றேல் பரலோகம் அல்லது நரகம்.*

*இந்த உண்மைகளின் வெளிச்சத்தில் நீங்கள் செய்ய வேண்டுவது என்ன? நிச்சயமாக நீங்கள் இரட்சிக்கப்பட கிறிஸ்துவினிடத்தில் திரும்ப வேண்டும். இதினால் நீங்கள் சிருஷ்டிக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுகிறீர்கள். நித்தியத்தை பரலோகத்தில் கழிப்பீர்கள், நீங்கள் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கத்துக்கான இடம் அது!*

---

*குறிப்புகள்*

[1]*"மனிதன்" எனும் பதம் இங்கே மனித வர்க்கம் அனைவரையும் அல்லது மனுக்குலத்தை குறிக்கிறது, ஆண் பெண் இரு பாலரும் இதற்குள் அடக்கம் - மனுஷன் மனுஷி இருவரும் (ஆதியாகமம் 1:27 காண்க).* [2]I. Opie and P. Opie, *The Oxford Dictionary of Nursery Rhymes,* 2d ed. (Oxford: Oxford University Press, 1997), 100-1. [3]This information was adapted from "Basic Chemistry," *Reader's Digest* 85 (November 1964): 74. [4]J. C. Simons and W. N. Kama, "A Review of the Effects of Weightlessness on Selected Human Motions and Sensations," AMRL memorandum P-36, Wright-Patterson Air Force Base, Ohio (May 1963): 6. [5]Desmond Morris, *The Naked Ape* (New York: McGraw Hill, 1967). [6]Bernard Ramm, *The Christian View of Science and Scripture* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 195-96. [7]*1 தெசலோனிக்கேயர் 5:23ல் மனிதன் "ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தை உடையவன் என்று விவரிக்கிறது." ஒரு மனித ஜீவி அப்படி விவரிக்கப் படும்போது, மனிதனுடைய நித்தியத்தை "ஆவி" சமமாக்குகிறது (வழக்கமாக அது "ஆத்துமா" என்று அழைக்கப் படுகிறது); ஆத்துமா மனிதனுடைய உயிரோடு சம்பந்தப் பட்டது, அவன் மரித்துப் போகாமல் உலகில் வாழும் காலம்வரை அவனை அடையாளப் படுத்துகிறது, மேலும் மிருகங்களுடனான அவனுடைய பங்கும் வெளிப்படுகிறது; "சரீரம்" என்பது, அவனுடைய மாமிச சரீரத்தைக் குறிக்கும்.* [8]*ரோமர் 12:1ம் கூட "உள்ளான மனுஷனையும்" அவனுடைய மாமிச சரீரத்தையும் வித்தியாசப் படுத்திக்*

*காட்டுகிறது. ரோமாபுரி கிறிஸ்தவர்கள் அவர்களுடைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கும்படி வேண்டப் பட்டார்கள். இந்த வகையில், அவர்கள் - ஆவிக்குரிய ஜீவிகளாக - மாமிச சரீரத்திலிருந்து வித்தியாசப் படுத்திக் காட்டப் பட்டார்கள்.* [9]Earl Nightingale, "How Much Are You Worth?" *AdvantEdge Newsletter* (http://www.nightingale.com/Newsletters/429.aspx?promo=INLACx429v2; Internet; accessed 9 December 2010).